# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.16 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | ஏ.ஆர்.மோகன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 21st day of November 2019.

முதல் விசாரணை

நான் சென்னை தடய அறிவியல் துறையில் ஆவணப்பிரிவில் துணை இயக்குனர் மற்றும் ஆவண நிபுணராக பணிபுரிந்து விட்டு 31.5.2014 ஆம் தேதி அன்று மாலை முதல் ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 5.3.2010 ஆம் தேதி அன்று நான் பணியில் இருந்தபோது நீதித்துறை நடுவர் எண்.3, கோவை அவர்களிடமிருந்து டி.நெ.351/2010 நாள் 3.3.2010 தேதியிட்ட கடிதத்துடன் சிங்காநல்லூர் காவல் நிலைய கு.எண்.964/2009 வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் முதல் நிலைக் காவலர் 1067 திரு.ஆனந்தன் என்பவர் மூலமாக மூடி முத்திரையிடப்பட்ட கவரில் பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்கள் கீழ்வருமாறு.

சர்ச்சைக்குரிய கையெழுத்துக்கள் உள்ள ஆவணங்களாக 2 இன்லெண்ட் லெட்டர்ஸ் பெறப்பட்டது. அவற்றில் ஒன்று 9.11.2009 தேதியிட்டு பாரதி, சரண்யா என்று முகவரியிட்ட கடிதம். என்னிடம் காட்டப்படும் கடிதம் தான் அந்த கடிதம் ஆகும். அது அ.த.சா.ஆ.9 ஆகும். அக்கடிதத்தில் உள்ள கையெழுத்துக்கள் D.1 என்று குறியீடு செய்யப்பட்டது.

மற்றொரு இன்லெண்ட் லெட்டர் திரு.பாலு என்று முகவரியிடப்பட்டு இருந்தது. அதில் உள்ள கையெழுத்துக்களுக்கு D2 என்று குறியீடு செய்யப்பட்டது. காண்பிக்கப்படும் கடிதம்தான் அந்த

கடிதம் ஆகும். அது அ.த.சா.ஆ.2 ஆக ஏற்கனவே நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி கையெழுத்துக்கள் திரு.வெங்கடேஷ் என்கிற வெங்கிடசுப்பிரமணியம் என்பவரிடமிருந்து பெறப்பட்ட 8 முழு தாள்கள், அவற்றில் நான்கு 23.1.2010 என்று தேதியிடப்பட்டும், மற்றொரு நான்கு தாள்கள் 25.1.2010 என்று தேதியிடப்பட்டிருந்தது. அந்த எட்டு மாதிரி கையெழுத்துக்கள் கொண்ட தாள்கள் S1 முதல் S8 வரை குறியீடு செய்யப்பட்டது. அந்த தாள்கள் அ.த.சா.ஆ.10 வரிசையாகும். S1 முதல் S8 வரை குறியீடு செய்யப்பட்ட மாதிரி கையெழுத்துக்களும், D1 மற்றும் D2 என்று குறியீடு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய கையெழுத்துக்களும் கவனமாக ஆய்வு செய்ததில் S1 முதல் S8 வரை குறியீடு செய்யப்பட்ட மாதிரி கையெழுத்துக்களை எழுதிய நபரே D1 மற்றும் D2 என்று குறியீடு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய கையெழுத்துக்களை எழுதியுள்ளார் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. இம்முடிவினை அறிக்கையாக DOC No.63/2010 நாள் 23.4.2010 ல் தயாரிக்கப்பட்டது. இம்முடிவினை மேற்கொள்ள ஏதுவாக இருந்த காரணங்களை காரணத்தாளில் குறிப்பிட்டு அறிக்கையுடன் இணைத்து ஆய்வுக்கு பெறப்பட்ட ஆவணங்களையும் கவரில் இட்டு ஆய்வக முத்திரையிடப்பட்டது. 13.5.2010 ஆம் தேதி அன்று தலைமைக் காவலர் 2311 திரு.கே.முருகேசன் என்பவரின் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நான் வழங்கிய அறிக்கை அ.த.சா.ஆ.11 ஆகும். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

எதிரி முன்னிலை, எதிரி தரப்பு வழக்குரைஞரும், முன்னிலை. குறுக்கு விசாரணை இல்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது.